**செய்தி வெளியீடு எண்: 351** **நாள்: 01.06.2018**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு, அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) வழங்கிய விருதுகளை இன்று (01.06.2018) காண்பித்து வாழ்த்து பெற்றார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை இன்று (01.06.2018) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் சந்தித்து, புதுடில்லியில் நடைபெற்ற 2016–17ஆம் ஆண்டிற்கான அனைத்து இந்திய மாநில சாலை போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பின் விருது வழங்கும் விழாவில், மாநகர் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் – விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர் மற்றும் கும்பகோணம் ஆகிய கழகங்களுக்கு வழங்கப்பட்ட 11 விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் வளங்கள் மற்றும் செயல்திறனை ஆராய்ந்து பொதுவான கட்டமைப்பின் கீழ் கொண்டு வர 1965ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13ஆம் நாள் அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) ஏற்படுத்தப்பட்டது. இக்கூட்டமைப்பு மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக 62 மாநில போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன.

இக்கூட்டமைப்பு ஆண்டுதோறும் அனைத்து மாநில போக்குவரத்துக் கழகங்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவற்றின் செயல்திறன்களை ஆய்வு செய்து விருதுகள் வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து விருதுகள் பெற்று வருகின்றன.

புது தில்லியில் அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) நடத்திய விழாவில், 2016–17ஆம் ஆண்டிற்காக, தமிழ்நாட்டில்

உள்ள ஆறு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்ட பதினொன்று (11) விருதுகளை போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

- மாநகரப் பேருந்துகள் – உயர்ந்தபட்ச உருளிப்பட்டையின் செயல்திறனுக்காக (Highest Tyre Performance) முதல் இடத்திற்கான கேடயமும்
- 3000 பேருந்துகளுக்கு மேல் உள்ள போக்குவரத்துக் கழகங்களில் ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கத்திற்காக (Highest KMPL) (4.40 KMPL) முதல் இடத்திற்கான கேடயமும்

மாநகர போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- புறநகர் பேருந்துகளில் பேருந்து உற்பத்தித் திறனில் உயர்ந்தபட்ச செயல்திறனுக்காக (Highest Performance in Vehicle Productivity-Mofussil Services) (533.2 கி.மீ) முதல் இடத்திற்கான கேடயமும்
- புறநகர் சேவையில் எரிபொருள் 1 லிட்டருக்கு இயக்கப்படும் தூரத்தில் அதிகபட்ச முன்னேற்றம் (Maximum Improvement in KMPL-Mofussil Services) (5.10இலிருந்து 5.16) இரண்டாம் இடத்திற்கான கேடயமும்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- குறைந்தபட்ச இயக்க செலவுக்கான விருது (வரி நீங்கலாக) - புறநகர் பிரிவு (Minimum Operational Cost Award [Without the element of Tax] – Mufussil Services) (1001க்கு மேல் 4000 பேருந்துகள்) – 30.93 CPKM முதல் இடத்திற்கான கேடயமும்
- புறநகர் சேவையில் 1 லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கத்திற்காக (Highest KMPL) (1001 – 4000 பேருந்துகள்) 5.48 KMPL முதல் இடத்திற்கான கேடயமும்
- புறநகர் பேருந்துகளில் பேருந்து உற்பத்தித் திறனில் உயர்ந்தபட்ச செயல்திறனுக்காக (Highest Performance in Vehicle Productivity – Mofussil Services) (512.93 கி.மீ.) இரண்டாம் இடத்திற்கான கேடயமும்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- புறநகர் பேருந்துகளை இயக்கும் கழகங்களில் உருளிப்பட்டை செயல்திறனில் (Winner for the Highest Tyre Performance) **தொடர்ச்சியாக 4 வது முறையாக** முதலிடத்தை பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- நகர பேருந்து இயக்கத்தில் அதிகபட்ச முன்னேற்றம் ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கம் (Maximum improvement in KMPL) (4.84இலிருந்து 5.03 KMPL) முதல் இடத்திற்கான கேடயமும்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- புறநகர் பேருந்துகளை இயக்கும் கழகங்களில் உயர்ந்தபட்ச உருளிப்பட்டையின் செயல்திறனுக்காக (Highest Tyre Performance) முதல் இடத்திற்கான கேடயமும்
- புறநகர் பேருந்துகளை இயக்கும் கழகங்களில் ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகபட்ச கி.மீட்டர் இயக்கம் (Winner for the Highest KMPL) (1001 – 4000 பேருந்துகள்) (5.51 KMPL) **தொடர்ச்சியாக 4 வது முறையாக** விருதும்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன்,இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.P.W.C.டேவிதார்,இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**